

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (31.01.2025) சென்னை, சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2024 – 2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதிய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் நூலகங்களின் நிலை குறித்தும் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார், தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட மாடல் ஆட்சியில் தற்போது வரை ரூ.7132 கோடி மதிப்புள்ள

# 7,400 ஏக்கர் கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, பிப்.1-

திராவிட மாடல் ஆட்சியில் தற்போது வரை 7132 கோடி ரூபாய் மதிப்புள்ள 7,400 ஏக்கர் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன என இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனும் பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில் பயணிக்கும் திராவிட மாடல் அரசு தமிழ் நாட்டில் மதச்சார்பின்மையை கடைபிடித்து சமய நல்லிணக்கத்தை ஆதரிக்கும் அரசாக விளங்குகிறது. மேலும் மக்களின் சமய நம்பிக்கைகளுக்கு உரிய மதிப்பளித்து திருப்பணிகளை சிரத்தையுடன் மேற்கொண்டு வருகிறது.

திராவிட மாடல் அரசு மக்களின் சமய உணர்வுகளை மதித்து இறை வழிபாட்டுத்தலங்களை மேலும் வளப்படுத்திவதில் பெரும் அக்கறையோடு செயல்படும் அரசு என்பதற்கு இந்து சமய அற நிலையத் துறையின் சிறப்பான செயல்பாடுகள் சான்றாகியுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற நாள் முதல் தற்போதுவரை 2,392 திருக்கோவில்களில் திருப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு திருக்குடமுழுக்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 7132 கோடி ரூபாய் மதிப்புள்ள 7,400ஏக்கர் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, 12202 திருக்கோவில்களில் 5,515 கோடி ரூபாய் செலவில் 23234 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருத்தலங்களின் ஒருங்கிணைந்த பெருந்திட்டத்தின் ஒரு பகுதியாக, 1,770 கோடி ரூபாய் செலவில் 19 கோவில் வளாகங்களில் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் முதலமைச்சரின் வழிக்காட்டுதல்களால் திருக்கோயி ல்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்களின் உள்ளம் அறிந்து செயல்படும் முதலமைச்சரின் நடவடிக்கைகளால் மக்கள் மகிழ்ச்சியோடு திருக்கோவில்களில் வழிபட்டு வருகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

# 6.6 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய உயிரினத்தின் எச்சம் கண்டுபிடிப்பு!

டென்மார்க்,பிப்.1-

டென்மார்க் நாட்டில் 6.6 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய கடல் வாழ் உயிரினத்தின் எச்சம் (வாந்தி) படிமங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் கோபன்ஹேகனின் தெற்கு பகுதியில் யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டீவன்ஸ் எனும் இடத்திலுள்ள பாறைகளில், படிமங்கள் சேகரிப்பாளரான பீட்டர் பென்னிக் என்பவர் காய்ந்த சுண்ணாம்பு கலவையின் மத்தியில் கடல் அல்லியின் உதிரிகள் இருப்பதை கவனித்து அதனை சேகரித்து ஆய்விற்காக கிழக்கு ஸீலாந்து அருங்காட்சியகத்திற்கு அனுப்பியுள்ளார்.

அங்கு அதனை ஆய்வு செய்து பார்த்தில் அது சுமார் 6.6 கோடி (66 மில்லியன்) ஆண்டுகளுக்கு முந்தைய க்ரெட்டாஷியஸ் காலத்தில் வாழ்ந்த கடல்வாழ் உயிரினத்தின் வாந்தி என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுகுறித்து, ஆய்வாளர்கள் கூறுகையில் அந்த எச்சத்தில் இரண்டு வெவ்வேறு வகையான கடல் அல்லி பூக்களின் உதிரிகள் இருப்பதாகவும், அதை அக்காலத்தில் வாழ்ந்த கடல் உயிரினம் ஏதேனும் சாப்பிட்டு, ஜீரணமாகாமல் கக்கியிருக்கக் கூடும் எனக் கணித்துள்ளனர்.

இதுபோன்ற அரிதான படிமங்கள் கண்டுபிடிக்கப்படுவதன் மூலம் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்களின் உணவு சங்கிலி குறித்த தகவல்கள் பெற்று அதன் மூலம் ஓர் உயிரினம் எந்த உயிரினத்திற்கு உணவாகியுள்ளது என்பது தெரிய வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். முன்னதாக, தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள எச்சமானது 6.6 கோடி (66 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்னால் அப்பகுதியிலிருந்த க்ரெட்டாஷியஸ் கடலில் வாழ்ந்த மீன் வகையைச் சேர்ந்த உயிரினத்தாக இருக்கக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் :

# வாக்குப் பதிவு நாளன்று வேட்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்!

## தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு நாளன்று வேட்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதுவருமாறு :-

98. ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 5.2.2025 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். 3.2.2025 அன்று மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது.

யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப். எம். ரேடியோ, வாட்ஸ் அப், முகநூல், டிவிட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாகப் பொது மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக் கூடாது. இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)ன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் முதலியோர் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் 3.2.2025 அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அத்தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

கல்யாணமண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பதை கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், 3.2.2025 அன்று மாலை 6.00 மணி முதல் செயல்திறனற்றதாகிவிடும்.

சட்டமன்றத் தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி பின்வருமாறு:

(i) அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம்

(ii) தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும்

(iii) தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம்.

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச் சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக்கூடாது. இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

(9) இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்களின் அரசியல் கட்சிகளின் தற்காலிக பிரச்சார அலுவலகம் வாக்குச் சாவடியிலிருந்து 200 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.



தமிழக முதல்வரின் வடசென்னை வளர்ச்சிப் பாதை திட்டத்தில் மாதவரம் தெற்கு பகுதி 30 (அ) வட்டத்தின் விநாயகபுரம் பேருந்து நிலையத்திற்கு ரூ. 1.41 கோடி மதிப்பீடு திட்டப் பணியை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் – சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர்கள் திருமலை ஜி.துரைசாமி, ஈ.ஏழுமலை, வட்ட செயலாளர் டி.சுந்தரம், எம்.சரவணன், அன்பில் மகேஷ், இ.ராமன், சிவில் எம்.செல்வம், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, டி.குருமூர்த்தி, அபிப் ரகுமான், கே.நரேந்திரன், எஸ்.என்.ராஜு, சி.பரமேஸ்வரி, எஸ்.பி.கண்ணன், ஏ.வி.முருகன், வி.பாஸ்கர், பி.எஸ்.என்.எல்.குமார், கௌதம், பாலாஜி, தேவன், வேலு, வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் லட்சுமி காந்தன், ஜெ.ஜி. தசரதன் மற்றும் மண்டலக் குழு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவலாங்காடு ஒன்றியம் அருங்குளம் பகுதியில் கே.கே.பி. தனியார் உடற்பயிற்சி நிலையம் திறப்பு விழா திருவாலங்காடு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன் தலைமையில் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கராத்தே கே.பாலு ஏற்பாட்டில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன் திறந்து வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பயிற்சியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## செந்தில்குமார் - கண்ணன் - அதிகாரிகள் பங்கேற்பு:

# இராயபுரத்தில் மூன்று நியாயவிலைக் கட்டிடங்கள்!

## ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப்.1

இராயபுரம் எம்.எல்.ஏ, தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 3 நியாய விலைக்கடைகள் கட்டுமான பணி நேற்று முன்தினம் தொடங்கியது. சென்னை மாநகராட்சி இராயபுரம் மண்டலம், 51வது வார்டுக்கு உட்பட்ட மணிகண்டன் முதலி தெரு உள்ளிட்ட பகுதியில் 3 நியாய விலைக்கடைகள் வாடகையில் இயங்கி வருகிறது. இப்பகுதி மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் புதிய ரேஷன் கடைகள் அமைத்து தர வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

மேலும், சொந்த இடத்தில் அமைத்து தர இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தியிடம் வார்டு பொதுமக்கள் கோரினார். அதன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 57 லட்சம் ரூபாய் அவர் ஒதுக்கி இருந்தார்.

இதையடுத்து நியாய விலைக்கடைகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை மணிகண்டன் முதலி தெருவில் நடந்தது. இதில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி கட்டுமான பணியை தொடங்கி வைத்தார்.

இதன் மூலம் பொதுமக்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகிலேயே கடைகள் கட்டப்படுவதால் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாக தெரிவித்தனர். விரைவில் நியாய விலை கட்டிடங்கள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படும் என்று சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அதேபோல் பணிகளை விரைந்து முடிக்கவும் ஒப்பந்ததாரர்களிடம் அவர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் இராயபுரம் கிழக்கு பகுதி தி.மு.க. செயலாளர் செந்தில் குமார், வட்ட செயலாளர் கண்ணன், மாநகராட்சி அதிகாரிகள் பிரபுதாஸ், நவீன் மற்றும் தி.மு.க.வினர், மாநகராட்சி ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதை தொடர்ந்து ராபின்சன் விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்டு வரும் கால்பந்து மற்றும் கூடைப்பந்து கட்டுமான பணியினை சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி ஆய்வு செய்து தரம் குறித்து கேட்டறிந்தார். மேலும் ஒப்பந்ததாரர்களிடம் பணிகளை விரைந்து முடிக்கவும் தரமாக கட்டவும் அறிவுறுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.தமீம்

**பிப்ரவரி 1 (2022)**



**இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளைப் பரப்பியவர்.**

**ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்டப் பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**1984ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.**

**1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராகப் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ந. மணிமொழியன்

**பிப்ரவரி 1 (1991)**



**பள்ளிப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**நாமக்கல் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து மூன்று முறை பொறுப்பு வகித்தவர்**

**தலைமைக் கழகச் சொற்பொழிவாளராகப் பணியாற்றி கழகத்தின் கொள்கைகளை மாநிலம் முழுவதும் பரப்பியவர்.**

**நாமக்கல் நகர கூட்டுறவு வங்கித் தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**'மணிமொழியனிடம் மணி(பணம்) குறைவாக இருந்தாலும், நல்ல மொழி உள்ளது' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு, இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**